www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 39 MARCH 2014

இதழ் - 39 பங்குனி 2014

# தாயக மக்களுக்கு மீண்டும் அழிவேற்படுத்தும் பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்!

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் உருவாக்குவதற்கு சிலர் முயற்சிப்பதாக கடந்த சில வாரங்களாக அரசாங்கம் சொல்லி வருகிறது. இந்த முயற்சியில் கோபி என்ற பிரதான நபரும், வேறு சிலரும் ஈடுபட்டுள்ளதாகச் சொல்லி அவர்களைத் தேடியும் படையினர் வடக்கில் பாரிய சுற்றி வளைப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். அவர்களைக் காட்டித் தருவோருக்கு என பல இலட்ச ரூபா சன்மானமும் அறிவிக்கப்பட்டது.




அத்துடன் இலங்கையில் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவதற்கு உதவுபவர்கள் என்று சொல்லி புலம்பெயர் நாடுகளில் புலிகளுக்குச் சார்பாகச் செயற்பட்டு வரும் அமைப்புகள் என்று சந்தேகிக்கப்படும் சில அமைப்புகளை அரசாங்கம் தடை செய்ததுடன், சில தனிநபர்களின் பெயர்களையும் வெளியிட்டது.

இந்த நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் புலிச் சந்தேக நபர் ஒருவர் மறைந்து இருப்பதாகச் சொல்லி பொலிசார் தேடுதல் நடாத்தச் சென்ற போது, இனம் தெரியாத அந்த நபர் பொலிசாரை நோக்கிச் சுட்டுவிட்டு தப்பியோடியதாகவும் தகவல்கள் வெளியாகின. பின்னர் அந்தப் புலிச் சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்ததாக தருமபுரத்தில் வசித்து வந்த ஒரு தாயும், அவரது 14 வயது சிறுமியும் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற சில தினங்களின் பின்னர் நெடுங்கேணியில் இரகசிய இடமொன்றில் தங்கியிருந்த சில புலிச் சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்காக சென்ற படையினருக்கும் (சுமார் 2000 பேர்) அந்தப் புலிச் சந்தேக நபர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 3 புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

அந்த மூவரில் ஒருவர் தேடப்பட்டு வந்த கோபி என்றும், இன்னொருவர் புலிகள் வைத்திருந்த விமானப்படையில் விமானியாக இருந்தவர் என்றும் கூறப்படுகின்றது. அவர்களுடைய பிரேத பரிசோதனையும், மரண விசாரணையும் அனுராதபுரத்தில் நடைபெற்று, அங்கேயே அவர்களது உடல்களும் அடக்கம் செய்யப்பட்டன.

இந்தத் தொடர் சம்பவங்கள் நாட்டு மக்களிடையே, குறிப்பாகத் தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளன. 30 வருட அழிவுகரமான இருண்ட யுகம் மீள்கின்றதா என்ற அச்சம் அவர்களிடம் தோன்றியுள்ளது.

இருப்பினும் புலிகளுக்குச் சார்பான அரசியல்வாதிகளும், அவர்களுக்காக இன்னமும் பிரச்சாரம் மேற்கொண்டு வரும் ஊடகங்களும், இது அரசாங்கத்தின் ஒரு கட்டுக்கதை என்றும், வடக்கில் தொடர்ந்தும் பெருமளவு படையினரைக் குவித்து வைத்திருக்கவும், இலங்கையில் புலிப் பயங்கரவாத இயக்கம் மீண்டும்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# அழிவுப்பாதையை சுட்டும் ஊடகங்கள்

புலிகளின் முற்றுமுழுதான அழிவிற்கு பின்னர், வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தினை தமிழர்கள் கைப்பற்றியது என்பது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே பொதுவாக கருதப்படுகின்றது. ஏனெனில் 'தமிழீழம்' கேட்டவர்கள், இந்த சபையினை வைத்தே இலங்கையில் 'தமிழ் அரசியல் பண்ண வேண்டுமென்ற' துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் இலங்கையில் 9 மாகாணசபைகள் இயங்கி வருகின்ற போதிலும், வடக்கு மகாணசபை தொடர்பான செய்திகளையே இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்கள் முக்கியத்துப்படுத்துகின்றன. **(இதற்கு விதிவிலக்காக விரல்விட்டு எண்ணக்கூடிய ஊடகங்களும் உள்ளன)** வடக்கு மகாணசபை தமிழர் பிரதேசங்களை உள்ளடக்கியது என்பதால்தான் பெரும்பாலான தமிழ், ஆங்கில ஊடகங்கள் இந்த முக்கியத்துவத்தினை வழங்குகின்றன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் கிழக்கு மாகாணசபையும் (மூவின மக்கள் ஏறத்தாழ சமஅளவில் வாழ்ந்தாலும்) பாரம்பரியான தமிழர் பிரதேசங்களை உள்ளடக்கியதுதான். மேலும் இந்த கிழக்கு மாகாணசபை இயங்குகின்றதா இல்லையா அல்லது எப்படி இயங்குகின்றது என்பவைபற்றி இந்த ஊடகங்கள் அதிகம் அலட்டிக் கொள்ளாததால், தமிழர்களில் கணிசமானவர்களும் அதனைப்பற்றி அக்கறைப்படுவதும் கிடையாது.

2013 ஆண்டு செப்ரம்பர் மாதம் நிகழ்ந்த வடக்கு மாகாணசபை தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெறப்போகின்றது என்பது நன்கு, தெளிவாக தெரிந்திருந்தும், தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் 'வானவில்' பத்திரிகையிலும் வடக்கு மகாணசபை பற்றி பல விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. கடந்த 65 வருடகால (தமிழ் காங்கிரஸ், தமிழரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள்) அரசியலை போலவே, மீண்டும் தமிழ் குறுந்தேசியவாதத்தினுள் வடக்கு மகாணசபையும் அமிழ்ந்துவிடப் போகின்றது என்ற ஆபத்தினை உணர்ந்தே 'வானவில்' கருத்துக்களை வெளியிட்டிருந்தது. வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவான உறுப்பினர்களின் மாகாணசபைக்குட்பட்ட அதிகாரம் சாராத, மீறிய செயற்பாடுகள், மற்றும் பத்திரிகை அறிக்கைகளை பார்க்கும்போது 'வானவில்'இன் கருத்துக்களை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் வெற்றி பெற்று, தற்போதைய வடக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கும் 30உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் புலிகளின் 'உற்பத்தி' என்பதனை மீண்டும், மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதனால் 65 வருடகால அரசியல் பாதையிலிருந்து வடக்கு மாகாணசபை பிறழ்ந்து போகமலிருக்க இவர்கள் கவனமாக பார்த்துக் கொள்வார்கள். எனினும் இந்த இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்களும் வடக்கு மகாணசபை தமிழ் குறுந்தேசியவாத பாதையிலிருந்து வழிதவறி போய்விடக்கூடாது என்பதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றன.

இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவின் (2014 ஆண்டு மார்ச் மாதம்) ஜெனிவா அமர்வில், அமெரிக்கா கொண்டு வரவிருந்த தீர்மானத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும், இத்தீர்மானத்தை ஆதரவளிக்கும் வகையில் வடக்கு மகாணசபை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும், ஜெனிவா அமர்வில் வடக்கு மகாணசபை உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டுமென்ற கருத்தை பரவலாக்கி வெற்றி பெறச்செய்ததில் இந்த இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்களுக்கு முக்கிய பங்குள்ளது.

இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுக்கவேண்டும் என்பதற்காக அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்த அதேவேளையில், அத்தீர்மானம் வெறும் கண்துடைப்பு, மேற்கத்தைய நலன் சார்ந்தது (இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பது) அல்லது இலங்கையில் தமிழர்களுக்கென தனியரசொன்றினை உருவாக்குவதற்கு உதவப் போவதில்லை போன்ற பரப்புரைகளையும் இந்த ஊடகங்கள் முன்னெடுத்தன. இது மாகாணசபை முறையிலான தீர்வு தமிழர்களின் பிரச்சனையை தீர்க்க உதவாது, அதேநேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளின் அதிகாரங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே குந்தியிருக்க வேண்டும் போன்ற எண்ணக் கருத்தினை (இந்த இலங்கை தமிழர்சார் தமிழ், ஆங்கில ஊடகங்களே இதனையும் உருவாக்கியது) ஒத்தது.

இலங்கையில் வாழும் பெரும்பான்மையினரான சிங்கள இனத்தவர் பற்றியும் இலங்கை அரசு பற்றியும் இலங்கையை பூர்விகமாக கொண்ட தமிழர்களில் கணிசமானவர்களிடையே ஒருமித்த கருத்தொன்று உள்ளது. 'இனி ஒருபோதும் சிங்களவனோடு சேர்ந்து வாழ முடியாது' என்பதே அக்கருத்து. இந்த 'நச்சு' கருத்தினை பெற்றெடுத்த 'தாய்'க்கட்சிகள் இப்போது அழிந்தொழிந்து போனாலும், இதனை நிலை நிறுத்துவதில் 'சுதந்திரன்'இலிருந்து இன்றைய பெரும்பாலான தமிழர்சார் அச்சு பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையங்கள் வரை கச்சிதமாக செயற்பட்டு வருகின்றன. *

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com


படிப்பகம்

www.padippakam.com




# கனடாவில் மேலும் ஒரு கடுமையான குடிவரவுச் சட்டம்!

**கதிர்**

பிரதமர் ஸ்ரீபன் கார்பர் தலைமையிலான கனடிய கொன்சவேர்டிக் கட்சி அரசாங்கம், கனடாவில் குடியேற வரும் வெளிநாட்டுப் பெண்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களை நல்ல முறையில் சமூகத்துடன் இணைப்பதற்கும் எனக்கூறி கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சட்டம், குடும்பங்களின் ஒன்றிணைவை கடுமையாகப் பாதிக்கும் என குடிவரவுத்துறை சட்ட வல்லுனர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கனடிய அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள சட்டத்தின்படி, அனுசரணை (Sponsor) அடிப்படையில் கனடாவில் குடியேற வரும் மனைவிமார், கணவன்மார், பிள்ளைகள் என்போருக்கும் மொழித் தேர்ச்சியும் (ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு), கல்வித் தராதரமும் முக்கியமாக இருக்கும். இது உலகின் தென் பகுதியில் இருந்து கனடாவில் குடியேற வரும் ஆங்கிலமோ, பிரெஞ்சோ தெரியாதவர்களைத்தான் கூடுதலாகப் பாதிக்கும் என சட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர்.

அத்துடன் கனடாவிலிருந்து தமது வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளுக்கு குடிவரவு அனுசரணை வழங்குபவர்களின் வருமானமும் கணக்கில் எடுக்கப்படுவதற்கான சரத்துகளை இச்சட்டம் கொண்டிருக்கும். இது குடிவரவாளர்களுக்கு மேலும் ஒரு தடைக்கல்லாகும். தற்போது குடும்பங்கள் இணைவதில் அனுசரணையாளரின் வருமானம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை.

கனடிய அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள இந்தச் சட்டம் குறித்து கருத்து வெளியிட்ட மெட்ரோ ரொறன்ரோ சீன மற்றும் தென்கிழக்காசிய சட்ட நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வழக்கறிஞர் அவி கோ (Avvy Go) "இது கனடாவின் குடும்ப ஒன்றிணைவு (குடிவரவு) திட்டத்தின் மீதான நேரடித் தாக்குதல்" என வர்ணித்துள்ளார். மேலும் அவர், "மக்கள் தமது மனைவிமாரையும் பிள்ளைகளையும் வரவழைப்பதைத் தடுப்பதன் மூலம் நாம் பிரம்மச்சரிய சமூகமொன்றுக்கு பின்நோக்கிச் செல்கின்றோம். ஏற்கெனவே சீனர்களுக்கு தலைவரி விதித்த வரலாறொன்றும் கனடாவுக்கு உள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கனடிய அரசாங்கத்தின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் அலெக்ஸாண்டர் (Chris Alexander) அவர்களினால் முன்மொழியப்படவுள்ள இந்தச் சட்டத்திற்கான தேவை உள்ளதாக அரசு கூறுகின்றது. இந்த வகையான சட்டத்தின் மூலம் பலவந்த திருமணங்கள், போலியான திருமணங்கள், பெண்களை சட்ட விரோதமாக வேலை வாங்குவது போன்றவற்றைத் தடுக்க முடியும் என கனடிய அரசு சார்பில் நியாயம் சொல்லப்படுகிறது.

தற்போதைய பழமைவாதக் கட்சி அரசாங்கம் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் பதவியேற்ற பின்னர், வெளிநாடுகளில் இருந்து வந்து கனடாவில் அகதி அந்தஸ்து கோருவோரின் தொகையில் ஏற்கெனவே பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்துடன் குடும்பங்களின் ஒன்றிணைப்பிலும் நீண்ட தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக கடுமையான விமர்சனங்கள் இருந்துவரும் சூழ்நிலையில், தற்போது கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம், குடிவரவாளர்களின் கழுத்தை மேலும் இறுக்குவதாக அமையும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## புதிய நூல் வெளியீடு

முற்போக்கு இலக்கிய – அரசியல் திறனாய்வாளர்

**ந.இரவீந்திரன் எழுதிய புதிய நூல் - "இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்"**

**வெளியீடு: மறுமலர்ச்சி மன்றம் – கனடா கிளை**




படிப்பகம்

www.padippakam.com

# கெனடி — சிறீமாவோ காலத்திலேயே சீர்குலைந்த

# அமெரிக்க - இலங்கை உறவுகள்!

1960களின் முற்பகுதியில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கெனடிக்கும், அதே காலகட்டத்தில் இலங்கையின் பிரதமராக (உலகின் முதல் பெண் பிரதமராகவும்) இருந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இடையில் முக்கியமான சில விடயங்கள் குறித்து தந்திப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளதாக அண்மையில் வெளியான வெள்ளை மாளிகையின் சில இரகசிய ஆவணங்களிலிருந்து தெரிய வந்திருக்கிறது.



1963 ஆண்டு யூன் 11 இல் திச் குவாங் டுச் **(Thich Quang Duc)** என்ற பௌத்த பிக்கு தென் வியட்நாமின் சைகோன் நகரில் தீக்குளித்தார்.

அந்த நேரத்தில் அமெரிக்கா பசுபிக் கடல் பிராந்தியத்தில் மேற்கொண்ட அணுவாயுத சோதனை, அமெரிக்காவுக்குச் சார்பான தென் வியட்நாம் அரசாங்கம் அந்த நாட்டின் பெரும்பான்மையான பௌத்த மக்களுக்கு ஏற்படுத்திய கொடுமைகள், இலங்கையில் சிறீமாவோவின் அரசாங்கம் அந்நிய எண்ணெய் கொம்பனிகளை தேசியமயமாக்கிய விவகாரம் என்பன இந்த தந்திகளில் பரிமாறப்பட்ட முக்கியமான விடயங்களாகும்.

அந்த காலகட்டத்தில் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த ஆர்.டபிள்யு.கோமெர் (R.W.Komer) ஜனாதிபதி கெனடிக்கு அனுப்பி வைத்த ஒரு இரகசியக் குறிப்பில் (E.O.12959, Sec.3.5(b)) "கடந்த பெப்ரவரியில் கிக்கென்லூப்பர் (Hickenlooper) திருத்தத்தின் பிரகாரம் உதவிகளை நிறுத்திய பின்னர் இலங்கையுடனான உறவுகள் கூடாத நிலையிலிருந்து மோசமான நிலைக்குச் சென்றுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தனது இரகசியக் குறிப்பில், ஏற்கெனவே எண்ணெய் கொம்பனிகளை சிறீமாவோ அரசு தேசியமயமாக்கியுள்ள நிலையில், தற்போதைய அமெரிக்க – இலங்கை உறவுகளின் சீர்கெட்ட நிலையை இலங்கையிலுள்ள இடதுசாரிகள் பயன்படுத்தி, சிறீமாவோ பண்டாரநாயக்கவை மேலும் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டக்கூடும் எனவும் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கைகளைப் பரிசீலிக்கும்படி கெனடியைக் கேட்டுக்கொண்ட கோமெர், "நீங்கள் இந்த சூடான உருளைக்கிழங்கை எப்படி கையாளப் போகிறீர்கள்" (On how you may handle this hot Potato) எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் இந்தப் பிரச்சினையை நட்புறவுடன் அணுகித் தீர்வுகாணுமாறும் அவர் ஜனாதிபதி கெனடியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவருடைய இந்த இரகசியக் குறிப்பு 1963இல் கெனடி கொலையாளி ஒருவனால் சுடப்பட்டு இறப்பதற்கு 4 மாதங்கள் முன்னதாக அனுப்பப்பட்டதாகும். அவர் இந்தக் குறிப்பை அனுப்புவதற்கு முன்னர் அப்பொழுது அமெரிக்காவில் இலங்கையின் தூதுவராக இருந்த மெரின்ன பிரான்சிஸ் டி சில்வாவை (Merenna Francis de Silva) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அந்தச் சந்திப்புக் குறித்து தான் அனுப்பிய இரகசியக் குறிப்பில் குறிப்பிடுகையில், "இலங்கைத் தூதுவர் தனது அரசாங்கத்தை விட மேற்குக்கு விசுவாசமாக இருக்கிறார்" எனவும் குறிப்பிட்டுள்ளார். (பாருங்கள் நமது நாட்டுத் தூதுவர் ஒருவர் தனது சொந்த நாட்டை விட எப்படி அந்நிய சக்திகளை நேசித்திருக்கிறார் என்பதை!)

**சுப்பராஜன்**

இங்கு ஹிக்கென் லூப்பர் திருத்தம் என வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு அதிகாரி ஆர்.டபிள்யு.மோமர் குறிப்பிடுவது, 1959இல் கியூபாவில் ஃபிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் சோசலிசப் புரட்சி அரசாங்கம் அமைந்த பின்னர் அந்த நாட்டுக்கான உதவிகளை நிறுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்ட சட்டத் திருத்தமாகும். அந்தத் திருத்தம் கியூபாவை இலக்கு வைத்து கொண்டு வரப்பட்டதாயினும், இலங்கை போன்ற நாடுகளுக்கான அமெரிக்க உதவியையும் அது பாதித்தது.


படிப்பகம்

www.padippakam.com

அத்துடன் வியட்நாமை ஆக்கிரமித்திருந்த பிரெஞ்சுப் படைகள் வியட்நாம் சுதந்திரப் போராளிகளால் தோற்கடிக்கப்பட்டு, அவை அந்த நாட்டை விட்டு வெளியேறிய பின்னர், அமெரிக்கா அங்கு கால் ஊன்றியதுடன், தனக்குச் சார்பான பொம்மை அரசொன்றையும் அங்கு நிறுவியது.

அந்த அரசு வியட்நாமிய மக்கள் மீது பல்வேறு விதமான அடக்குமுறைகளை அமெரிக்காவின் உதவியுடன் கட்டவிழ்த்துவிட்டது. ஒரு கட்டத்தில் தென் வியட்நாமிய அரச படைகளால் 9 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வியட்நாமிய பௌத்த பிக்கு ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி மரணித்தார். அது வியட்நாமில் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இது பற்றி ஜனாதிபதி கெனடிக்கு அனுப்பிய தந்தியொன்றில் சிறீமாவோ பண்டாரநாயக்க வினவியிருந்ததுடன், ஆட்சேபனையும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் உலக சமாதானத்துக்கு பங்கம் ஏற்படும் வகையில் அமெரிக்கா பசுபிக் கடற்பிராந்தியத்தில் மேற்கொண்ட அணுவாயுத சோதனை பற்றியும் கெனடியிடம் பிரஸ்தாபித்திருந்தார்.

இலங்கையின் புகழ்பெற்ற பிரதமர்களில் ஒருவரும், தனது கணவருமான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க வெளிநாட்டு சக்திகளின் கையாள் என்று கருதப்படும் கொலையாளி ஒருவனால் 1957 செப்ரெம்பரில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பின்னர், 1960 பொதுத் தேர்தல் மூலம் சிறீமாவோ அரசியலில் பிரவேசித்து நாட்டின் பிரதமரானார்.

அதைத் தொடர்ந்து தனது கணவர் துணிச்சலுடன் மேற்கொண்ட ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை சிறீமாவோவும் தொடர்ந்தார். இந்த நடவடிக்கைகளில் ஒன்றாக அந்நியருக்குச் சொந்தமான எண்ணெய் கொம்பனிகள் தேசியமயமாக்கப்பட்ட பொழுது, அமெரிக்க எண்ணெய் கொம்பனிகளும் தேசியமயமாக்கப்பட்டன. அதுபற்றியே வெள்ளை மாளிகை பாதுகாப்பு அதிகாரி கொமெர் கெனடிக்கு அனுப்பிய இரகசியக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சி அரசின் பங்காளியாக இருந்ததுடன், அக்கட்சியின் தலைவர் டொக்டர் என்.எம்.பெரேரா நிதி அமைச்சராகவும் இருந்தார். அதனால் சிறீமாவோ அரசின் தேசியமய நடவடிக்கைகள் இடதுசாரிகளின் தூண்டுதலினால்தான் நடைபெற்றவை என்ற தவறான அபிப்பிராயம் அமெரிக்காவிலும் மேற்கு நாடுகளிலும் நிலவியது.

இடதுசாரிக் கட்சிகள் இலங்கையிலிருந்த அந்நியருக்குச் சொந்தமான கொம்பனிகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரி வந்தமை உண்மை என்ற போதிலும், அது மட்டும் சிறீமாவோ அரசின் நடவடிக்கைகளுக்குக் காரணமாக அமைந்துவிடவில்லை. இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத 1956ஆம் ஆண்டிலேயே பண்டாரநாயக்க தேசியமய நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார்.

பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு சோசலிசக் கட்சி அல்லவென்ற போதிலும், ஐக்கிய தேசியக் கட்சி போல ஏகாதிபத்தியத்துக்குத் துணை போகாமல் நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கமுள்ள தேசபக்தக் கட்சியாக இருந்தது. அதனால்தான் 60களில் சிறீமாவோ அரசில் இடதுசாரிக் கட்சியான சமசமாஜக் கட்சியினாலும், பின்னர் 1970இல் கம்யூனிஸ்ட் கட்சியினாலும் கூட்டுச்சேர முடிந்தது. அந்த நிலைமை இன்றுவரை நீடிக்கின்றது.

இடதுசாரிக் கட்சிகள் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசுகளில் கூட்டுச் சேர்ந்த வரலாறு தனியானது. அவ்வாறு சேர்ந்ததால்தான், பல முற்போக்கு நடவடிக்கைகளை அந்த அரசுகள் மேற்கொள்ள முடிந்தது என்ற வாதமும், அப்படிச் சேர்ந்ததின் காரணமாகவே இடதுசாரிக் கட்சிகள் மக்களின் நம்பிக்கையையும், தமது தனித்துவத்தையும் இழந்து இன்று மிகவும் பலவீனப்பட்ட நிலையை அடைந்துள்ளன என்ற வாதமும், இன்றுவரை முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அது பற்றி வாதிப்பது இங்கு எமது நோக்கமல்ல.

1960இல் பதவிக்கு வந்த சிறீமாவோ அரசு மிகவும் பலவீனமான நிலையிலேயே இருந்தது. இருந்தும் அது ஏகாதிபத்திய விரோத, பிற்போக்கு விரோத நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. அதன் காரணமாக அதற்கு ஏகாதிபத்திய சக்திகளினதும், ஐ.தே.க தலைமையிலான உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளினதும் வலுவான எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. மறுபக்கத்தில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி மூன்றும் சேர்ந்து 'இடதுசாரி ஐக்கிய முன்னணி' என்ற வலுவான முன்னணி ஒன்றை அமைத்து, தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் பிரசித்தி பெற்ற 21 கோரிக்கைகளை (பிரதான கோரிக்கை நளொன்றுக்கு 1ரூபா சம்பள உயர்வு) முன்வைத்து 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தால் போன்ற நடவடிக்கை ஒன்றுக்குத் தயாராகி வந்தன.

இந்த இருபக்க நெருக்கடிகளாலும் சிறீமாவோ அரசு அல்லாட வேண்டி ஏற்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளிடமும், உள்ளூர் பிற்போக்கு சக்திகளிடமும் அடிபணிவதா அல்லது இடதுசாரிகளின் ஆதரவைப் பெறுவதா என்ற கேள்வி சிறீமாவோ அரசின் முன் எழுந்து நின்றது. நாட்டின் நன்மை கருதியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைப் பாரம்பரியம் காரணமாகவும், சிறீமாவோ இடதுசாரிகளின் ஆதரவைப் பெறத் தீர்மானித்தார்.

அதன் அடிப்படையில் சமசமாஜக் கட்சி அரசுடன் இணைந்து கொண்டது. அந்தக் கட்சி இடதுசாரி முன்னணியை உடைத்துக் கொண்டு அரசில் சேர்ந்ததால், அதன் செயற்பாடு 'துரோகம்', 'காட்டிக்கொடுப்பு' என ஏனைய இடதுசாரிக் கட்சிகளால் விமர்சிக்கப்பட்டது. ஆனால் அடுத்து 1965இல் ஆட்சிக்கு வந்த ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க அரசில் பிலிப் குணவர்த்தன இணைந்து மந்திரியானார்! கம்யூனிஸ்ட் கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி என்பனவற்றுடன் கூட்டுச் சேர்ந்ததுடன், 1970இல் இருந்து அதன் அரசாங்கங்களிலும் பங்கேற்று வருகிறது.

இடதுசாரிக் கட்சிகளின் இந்தப் போக்கு காரணமாக ஒட்டு மொத்தமாக இலங்கையின் முற்போக்குப் பயணத்துக்கு நன்மை பயத்தாலும், அவற்றின் சோசலிச இலக்கு இழக்கப்பட்டு தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடம் தலைமை ஒப்படைக்கப்பட்டு, அவற்றின் வாலாக அவை மாறியுள்ளன. இந்த நிலைமை நீடிக்கும் வரை இலங்கையில் சோசலிச இலட்சியம் என்பது வெறும் கனவாகவே இருக்கும்.

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com

# சாதி எதிர்ப்புப் போராட்டமும் கம்யூனிஸ்ட்டுகளும்

1. இந்திய வர்க்க சமுதாயத்தின் பல்வேறு கட்டங்களில் மேலாண்மை செலுத்திய அரை அடிமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ உற்பத்தி முறைகளிலும் சாதிய முறை நிலவி வந்திருக்கிறது. கம்யூனிச உற்பத்தி முறையில்தான் அதை வெல்ல முடியும். 'தலித்' விடுதலைக்குப் போராடுபவர்கள், அத்தகைய கம்யூனிச சமுதாயத்தை அமைக்கப் போராட வேண்டும். அதுதான் வர்க்கம், சாதி, அரசு மற்றும் தந்தைவழி ஆதிக்கம் அற்றதாக அமையும்.

2. உற்பத்தி முறைகளுடன் சாதியானது பின்னிப் பிணைந்துள்ளதால், இந்தியாவில் வர்க்கச் சுரண்டலை எதிர்க்கும் போராட்டமானது தவிர்க்க முடியாதவாறு சாதித்தன்மையைப் பெறுகிறது. இவ்வாறு அது சாதிச் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் எதிர்க்கும் போராட்டமாகவும் இருக்கின்றது. சாதியை எதிர்க்காத எந்தவொரு வர்க்கப் போராட்டமும் முழுமை பெறாததாகவும், கற்பனைவாதமாகவும் (Abstract) அமைகிறது. எடுத்துக்காட்டாக 1930களிலிருந்து தொடர்ந்து வரும் கிசான் சபாவின் (விவசாயிகள் அமைப்பு - வானவில்) பகுதிப் போராட்டம் சாதிப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இந்தியாவிலேயே முழுமைபெற்ற விவசாயப் புரட்சியான தெலுங்கானா எழுச்சியானது வேத்பிகார் மற்றும் தீண்டாமை ஒழிப்பு, தாழ்ந்த சாதி மக்களுக்கு நிலம் வழங்குதல் ஆகியவற்றுக்காகவும் போராடியது.

3. பல பாரம்பரிய மார்க்சியவாதிகள் - ஆரம்பத்தில் அம்பேத்கார் உட்பட -தொழில் சார்ந்த முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது, சாதியை



கெய்ல் ஓம்வெட் (Gail Omvedt)

அடியோடு ஒழித்துவிடும் என்று நம்பினார்கள். அவர்கள் சாதியையும் நிலப்பிரபுத்துவத்தையும் ஒன்றாகக் கருதினர். முதலாளித்துவமானது பகுத்தறிவுப்பூர்வமானது என்ற கற்பனையை வளர்த்தனர். ஆனால் முதலாளித்துவமோ இனவாதத்தையோ, மதத்தையோ, தந்தைவழி ஆதிக்கத்தையோ ஒழித்ததில்லை. அது சாதியை ஏன் ஒழிக்க வேண்டும்? எனவே சாதிச் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்த போராட்டமானது ஜனநாயக சமதர்மப் போராட்டமாகும்.

4. சோசலிசத்தை எட்டுதலினாலேயே சாதியை ஒழித்துவிட முடியாது. சோசலிசம் என்பது முதலாளித்துவ அரசை அழித்த பிறகு முதலாளித்துவத்திற்கும் கம்யூனிச சமூகத்திற்கும் இடைப்பட்ட சமூகம் ஆகும். ஒரு மாற்றத்திலிருக்கும் சமுதாயமாகவிருப்பதால் பழைய வர்க்கங்களும், குழுக்களும், உற்பத்தி உறவுகளும், கருத்தமைவுகளும் தொடர்ந்து நீடிக்கவே செய்யும். அதாவது வர்க்கப்போராட்டம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் கற்பனாவாத (Abstract) வர்க்கப் போராட்டமாக இல்லாமல், சமுதாயத்தின் அந்தந்த வரலாற்றுக் கட்டங்களில் நிலவுகின்ற உற்பத்தி உறவுகள், நிறுவனங்களைப் பொறுத்த பருண்மையான (Concrete) வர்க்கப் போராட்டமாக அமையும். அதாவது சாதி எதிர்ப்புப் போராட்டமும், சாதிப் போராட்டமும் (மேல் மட்டத்திலுள்ளவர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு சாதிக் கருத்தமைவுகளை வலியுறுத்துவது), சோசலிச சமுதாயத்தில் தொடர்ந்து நடைபெறும்.

5. கம்யூனிஸ்ட்டுகள் சோசலிசத்தை நிலைநாட்டுவதற்காக மட்டுமே போராடவில்லை. அதாவது பூர்சுவா தகர்ந்து உற்பத்தியின் மீது ஒட்டுமொத்தக் கட்டுப்பாடு கொண்டு வருதல் மட்டுமே நோக்கமல்ல. அவர்கள் கம்யூனிசத்திற்காகப் போராடுகிறார்கள். அத்தகைய 'வர்க்கமற்ற, சாதியற்ற, தந்தைவழி ஆதிக்கமற்ற' சமுதாயத்தை உணர்வுபூர்வமாக உருவாக்க வேண்டும். அது சோசலிச சமுதாயத்திலிருந்து மட்டுமல்லாது, பூர்சுவா அரசு மற்றும் நிலப்பிரபுத்துவச் சுரண்டலை எதிர்த்த போராட்டத்திலிருந்தே உருவாக்கப்படல் வேண்டும். இந்தப் புரட்சிகரமான பாட்டாளிவர்க்கப் போராட்டம் இருக்கின்ற பூர்சுவா அரசையும் உற்பத்திச் சாதனங்களையும் அப்படியே எடுத்துக் கொள்ளாமல் புதிய அரசியல் அதிகார வடிவங்களை (உருமாற்றக் காலகட்டத்தில்) உருவாக்கி உற்பத்திச் சாதனங்களையும் உருமாற்றுகின்றது. புதிய மக்களதிகார அமைப்புகள், புதிய உற்பத்தி உறவுகள், புதிய மனித உறவுகள் ஆகியவற்றை உருவாக்கும் முயற்சிகள் இவற்றை உள்ளடக்கிய 'விடுதலை பெற்ற பகுதிகள்' என்ற கோட்பாட்டில் இக்கருத்து காணக் கிடைக்கின்றது. அது இந்த இயக்கத்தின் எல்லாக்


படிப்பகம்

www.padippakam.com

கூறுகளிலும் வியாபிக்கின்றது, வியாபிக்க வேண்டும். அதாவது சாதி உறவுகளையும் தந்தைவழி ஆதிக்க உறவு முறையையும் சமூக அளவிலும் அன்றாட வாழ்க்கையிலும் எதிர்த்துப் போராடுவதானது புரட்சிகரப் போராட்டத்திலும் மக்களதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் மிக முக்கியப் பங்கினை வகிக்க வேண்டும்.

இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளின் கட்சி வரலாற்றில் சாதியை எதிர்த்து வந்துள்ளனர் என்பது உண்மைதான் என்பதற்கு கேரளாவும், ஆந்திராவும் போதிய எடுத்துக்காட்டுகள். ஆனால் அதனை அவர்கள் திட்டவட்டமான கொள்கை அடிப்படையில், 'இந்தியப் புரட்சி'க்கு முக்கியப் பிரச்சினையாக சாதி அமைந்துள்ளது என்பதனை உணர்ந்து போராடவில்லை. சமீப காலம் வரை தெற்காசிய சமுதாயத்தின் மிகக் குறிப்பிடத்தக்க அமைப்பாக சாதி திகழ்கிறதென்பதையும், அதனை ஆய்ந்தறிதலும் செயல் திட்டம் வகுத்தலும் மிக முக்கியமானதென்றும், கம்யூனிச செயல் வீரர்கள் கருதவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (CPI) யின் அறிக்கைகளின் முதல் எட்டுத் தொகுப்புகளிலோ அல்லது இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) அல்லது கிசான் சபாவின் தேர்தந்தெடுக்கப்பட்ட அறிக்கைகளிலோ, 'சாதி' பற்றிக் குறிப்பிடவில்லை. பெண்ணடிமை பற்றியும் குறிப்பிடவில்லை. இப்பொழுதுதான் இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதுவும் 'தலித்'களின் பலமும், சாதி எதிர்ப்புப் போராட்டங்களும், கடுமையான விவசாயப் போராட்டங்களில் சாதியின் பங்கும்தான் இப்பிரச்சினையை முக்கியத்துவப்படுத்திக் காட்டியுள்ளன என்பதனை ஒப்புக் கொண்டாக வேண்டும். இன்று இடதுசாரி இயக்கத்தவரைப் பார்த்து, தலித்துகள் பல வினாக்களை எழுப்புகிறார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏன் மேல்சாதிக்காரர்களாகவே இருக்கிறார்கள்? மார்க்சிஸ்ட்டுகள் ஏன் பூஜை செய்கிறார்கள்? ஏன் தங்கள் மக்களைத் தகுதியுள்ள மணமகனுக்கே கொடுக்கிறார்கள்? நீங்கள் உண்மையான கம்யூனிஸ்டு என்பதை எப்படி அறிவது? பாட்டாளி என்பது யார்? மார்க்சிஸ்ட்டுகள் ஏன் சமுதாயப் பிரச்சினைகளை தூக்கிவிட்டு, பொருளாதாரப் பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொள்கின்றனர்? இந்த வினாக்களுக்கு விடையிறுப்பது அவ்வளவு எளிதன்று.

(இந்தப் பத்தி இந்தியாவின் மிகச் சிறந்த இடதுசாரிச் சமூக ஆய்வாளர்களில் ஒருவரான கெய்ல் ஓம்வெட் (Gail Omvedt) அவர்களின் நூலான 'வர்க்கம் - சாதி - நிலம்' என்ற பிரசுரத்தின் ஒரு கட்டுரையின் பகுதியாகும். வாசகர்களின் சிந்தனைக்காக இதை இங்கு பிரசுரித்துள்ளோம்) *

## அதிகரித்து வரும் புற்றுநோய் தாக்கம்!

உலக சுகாதார நிறுவனத்தின் ஒரு பகுதியான சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி முகவரம் (IARC) வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, 2012இல் குறைந்த, நடுத்தர வருமானமுள்ள நாடுகளில் உள்ள 14 மில்லியன் (ஒரு கோடி நாற்பது இலட்சம்) மக்களை ஆய்வுக்குட்படுத்திய போது, அவர்களில் 57 வீதமானோர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 65 வீதமானோர் பின்னர் இறந்துவிட்டனர்.

வறுமையான நாடுகளில் எய்ட்ஸ், மலேரியா என்பவற்றைவிட, புற்றுநோய் அதிகமானோரைக் கொன்றுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இப்போதைய உலகில் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலுமே புற்றுநோய் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

பெரும்பாலும் புகைத்தலினால் ஏற்படும் நுரையீரல் புற்றுநோயால் 2012இல் உலகம் முழுவதும் 1.6 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். சீனா, ரஸ்யா, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் சனத்தொகையில் ஏறத்தாழ அரைவாசிப்பேர் புகைத்தலுக்கு அடிமையாயுள்ளனர். புகைத்தலினால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதைக் கண்டறிந்த பல நாடுகள் அதனைக் கட்டுப்படுத்த பலவிதமான சட்ட மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. புற்றுநோய் சிகிச்சைக்காக வருடந்தோறும் 320 பில்லியன் டொலர்கள் (32,000 கோடி) செலவிடப்படுவதாக சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி முகவரத்தின் பணிப்பாளரான கிறிஸ்தோபர் வைல்ட் (Christopher Wild) தெரிவித்திருக்கிறார்.

மது அருந்துவது, புகைப்பது, கொழுப்பான உணவுகளை அதிகம் உண்பது போன்றோருக்கே பெரும்பாலும் மார்பக, குடல் மற்றும் நுரையீரல் புற்றுநோய் அதிகம் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தலைக்கு சாயம் பூசுவோருக்கும் மார்பகப் புற்றுநோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தகவல் ஆதாரம்: The Economist

### இலங்கையில்

நாள்தோறும் 50 முதல் 60 பேர் வரை புற்று நோயினால் உயிரிழப்பதாக இலங்கையின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "புற்றுநோய் தடிமன் இருமலைப்போல வியாபித்துள்ளது. அதிகமானவர்கள் புகைப் பிடித்தல் காரணமாகவே புற்றுநோயினால் பாதிக்கப்படுகின்றனர். ஒரு புற்றுநோய் நோயாளிக்காக அரசாங்கம் 150 இலட்சம் ரூபா செலவிடுகின்றது. சில நோயாளிகளுக்காக வழங்கப்படும் ஒரு ஊசியின் பெறுமதி நான்கு இலட்சம் ரூபாயாகும்" என்று தெரிவித்துள்ளார். *


படிப்பகம்

www.padippakam.com

# ஜெனீவாவில் உறுப்பு நாடுகளின் பெரும்பான்மை ஆதரவைப் பெறத் தவறிய அமெரிக்கத் தீர்மானம்!

இந்த வருடம் மார்ச் மாதம் ஜெனீவாவில் கூடிய ஐ.நா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த மூன்றாவது தீர்மானமும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்னைய இரண்டு தீர்மானங்களை விட தற்போதைய தீர்மானத்தின் முக்கியத்துவம், இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றுக்கு பரிந்துரைத்திருப்பதுதான்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னோடியாக சென்ற வருடம் அமெரிக்காவால் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பல அமெரிக்க அதிகாரிகள் ஒருவர் பின் ஒருவராக இலங்கை சென்று பல தரப்பினரையும் சந்தித்து வந்தனர். இலங்கைக்கு பல மறைமுக எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

அத்துடன் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் சென்ற வருட இறுதிப் பகுதியில் இலங்கை சென்று வந்தார். ஆனால் அவர் அங்கு சென்று வருவதற்கு முன்பே இலங்கை சம்பந்தமாக நிலைப்பாடு ஒன்றை எடுத்திருந்ததை அவர் தெரிவத்து வந்த கருத்துக்கள் வெளிச்சப்படுத்தி இருந்தன. தனது விஜயத்தின் முடிவில் கொழும்பில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது பலரும் எதிர்பார்த்தவாறே இலங்கை அரசு மீது அவர் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்திவிட்டு வந்தார்.

இவற்றின் பின்னணியில் அவர் மார்ச் மாத மனித உரிமைப்




பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை மீது சர்வதேச விசாரணை ஒன்று தேவை என வலியுறுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டார். அதே கருத்துதான் அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த தீர்மானத்திலும் பிரதிபலித்தது. கூடவே ஐ.நா. மனித உரிமை ஆணையாளரே சர்வதேச விசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என அமெரிக்கத் தீர்மானம் கேட்டுக் கொண்டது. எல்லாமே நன்கு நெறியாள்கை செய்யப்பட்ட ஒரு நாடகம் போல நடந்து முடிந்துள்ளது.

அமெரிக்கத் தீர்மானம் வாக்களித்த நாடுகளில் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ள போதிலும், தார்மீக அடிப்படையில் பார்த்தால் அது வெற்றியல்ல என்ற விமர்சனங்களும் முன் வைக்கப்படுகின்றன. அதற்குக் காரணம் மனித உரிமைப் பேரவையின் மொத்த உறுப்பு நாடுகளின் தொகை 47 ஆகும். அதில் அரைவாசிக்கும் குறைவான 23 நாடுகளின் ஆதரவே அமெரிக்கத் தீர்மானத்துக்குக் கிடைத்துள்ளன. மிகுதி 24 நாடுகளில் 12 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்துள்ளன. இன்னொரு 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அதாவது தீமானத்தை ஆதரித்த 23 நாடுகளை விட ஒரு நாடு கூடுதலாக 24 நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. இந்த வாதம் பார்வைக்கு 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதை போலத் தெரிந்தாலும், இதில் சில அடிப்படை உண்மைகளும் இருக்கின்றன.

**சடகோபன்**

ஏனெனில் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த நாடுகளில் சீனா, ரஸ்யா என்பன உலகின் சக்திமிக்க நாடுகளாக இருப்பதுடன், சனத்தொகை அடிப்படையிலும் பலமான நாடுகள். அத்துடன் அந்த இரு நாடுகளுக்கும் ஐ.நா பாதுகாப்பு சபையில் வீட்டோ (ரத்து) அதிகாரமும் உண்டு. அதன் மூலம் இலங்கைக்கு எதிராக ஐ.நாவோ அல்லது அமெரிக்கா தலைமையிலான நாடுகளோ ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டால், அவற்றால் அதைத் தடுத்து நிறுத்த முடியும்.

இன்னொரு முக்கியமான விடயம் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிக முக்கியமான நீண்டகாலக் கூட்டாளியான சவூதி அரேபியா தீமானத்தை எதிர்த்து வாக்களித்திருப்பதுதான்! மற்றது அவுஸ்திரேலியா இம்முறை ஒரு உறுப்பு நாடாக இல்லாத போதும் அமெரிக்கத் தீர்மானத்தை அது தீவிரமாக எதிர்த்து வருகிறது.

அத்துடன் அமெரிக்கத் தீர்மானத்தில் வாக்களிக்காது புறக்கணித்த நாடுகளும் மிக முக்கியமானவை. ஆசியாவில் சீனாவுக்கு எதிராக அமெரிக்காவின் மிக நெருங்கிய கூட்டாளியாக இருக்கும் யப்பான் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்காது புறக்கணித்துள்ளது. அதுபோல உலகில் சீனாவுக்கு


படிப்பகம்

www.padippakam.com

அடுத்ததாக சனத்தொகையிலும் பொருளாதாரத்திலும் இருக்கும் இந்தியா சென்ற முறை போல அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்காது இம்முறை ஒதுங்கிக் கொண்டது. அதுவும் உள்நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றில் இந்திய அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்சோக்கியுள்ள நிலையில் இவ்வாறு துணிச்சலாக நடந்து கொண்டது வியப்பான விடயம்.

அதைவிட இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்காததிற்குச் சொன்ன காரணம் மிகவும் முக்கியமானது. "இத்தீர்மானம் இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது" என இந்தியா தெரிவித்துள்ளது. இந்தியாவின் இந்தக் கருத்து, அமெரிக்காவும், ஐ.நா மனித உரிமைப் பேரவையும் ஏனைய நாடுகளின் இறையாண்மையில் தலையிடுகின்றன என்று குற்றம் சாட்டுவது போல உள்ளது.

ஆனாலும் இவ்வாறான முக்கியமான ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டிய இந்தியா, 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற கணக்கில் ஒதுங்கி இருக்காமல் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

தீர்மானத்தை ஆதரிக்காமல் புறக்கணித்த இன்னொரு நாடு தென் ஆபிரிக்கா. அந்த நாடு மிக நீண்ட காலம் நிறவெறிக்கு எதிராக நெல்சன் மண்டேலா தலைமையில் போராடி வெற்றி பெற்றதோடு, நாட்டில் மீள் இணக்கப்பாட்டையும் வெற்றிகரமாக நிறைவேற்றிய நாடு. தற்பொழுது இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவவும் முன் வந்துள்ளது. கடந்த காலங்களைப் போல புலம்பெயர் புலிகள் அந்த நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்த பலமாக முயன்ற போதிலும் அது தீமானத்தை ஆதரிக்கவில்லை. இது புலம்பெயர் புலிகளுக்கும் அமெரிக்க இராஜதந்திரத்துக்கும் ஒரு பின்னடைவாகும்.

அமெரிக்கா தனது தீர்மானத்தை மிக அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற வைப்பதற்கு எத்தகைய பிரயத்தனங்களை எடுத்திருக்கும் என்று இங்கு விவரிக்கத் தேவையில்ல. இன்றைய உலகில் அமெரிக்கா தான் முதல்தரமான வல்லரசு. அதற்கு எல்லா நாடுகளிலும் ஏதோ ஒரு வகையில் ஒரு பிடியுண்டு. அதனுடன் முரண்டு பிடித்துக்கொண்டு ஒரு நாடு உலகில் வாழ்வது சிரமம். இருந்தும் அரைவாசிக்கும் மேற்பட்ட நாடுகள் ஏதோ ஒரு துணிச்சலுடன் அமெரிக்காவின் தீர்மானத்தைப் புறக்கணித்துள்ளமை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

ஆனாலும் கணிதாம்ச ரீதியில் வாக்களித்த நாடுகளில் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவைப் பெற்று அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சரி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இனி அடுத்தது என்ன என்பதுதான் கேள்வி. இலங்கை அரசைப் பொறுத்தவரை இந்தத் தீர்மானம் அந்நாட்டின் உள் விவகாரங்களிலும், இறைமையிலும் தலையிடுவதாக உள்ளதால், தான் அதை ஏற்கப் போவதில்லை எனவும், ஐ.நா மனித உரிமைப் பேரவை நடாத்தப்போகும் விசாரணைகளுக்கு ஆதரவளிக்கப்படமாட்டாது எனவும் அது பகிரங்கமாக அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நாடு இப்படி அறிவித்துவிட்டதால், தீர்மானத்தை நிறைவேற்றியவர்களும், அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஏற்றிருப்பவர்களும் அடுத்து என்ன செய்யப் போகிறார்கள்? இலங்கையின் போக்கிற்கு விட்டுக் கொடுப்பார்களா அல்லது அதன் மீது பலவந்தம் செய்வர்களா? இதுதான் இப்பொழுது பலரையும் சிந்திக்க வைத்துள்ள கேள்வி.

இதுபற்றி இப்பொழுது நாம் எதனையும் எதிர்வு கூற முடியாது என்ற போதிலும், இப்படியாக சில நாடுகள் மீது - குறிப்பாக கியூபா, வட கொரியா, இஸ்ரேல் போன்ற நாடுகள் மீது - இதற்கு முன்னர் ஐ.நா மனித உரிமைப் பேரவை நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு என்ன நடந்தது என்பதை படித்துப் பார்ப்பதால் பயனுண்டு.

ஆனாலும் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கையில், எல்லோரிடமும் ஒரு கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. அதாவது உலகில் இதைவிட மிகவும் பாரதூரமான பிரச்சினைகள் இருக்கையில், உதாரணமாக வியட்நாம் யுத்தத்தில் 30 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டது, ஆபிரிக்காவில் சில நாடுகளில் பல பத்து இலட்சம் சிறுபான்மை இன மக்கள் அழிக்கப்பட்டது போன்றவை - இலங்கை மீது மட்டும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தொடர்ச்சியாக நெருக்கடிகளைச் செய்வதன் நோக்கம் என்ன என்பதுதான் அந்தக் கேள்வி.

சில வேளைகளில் இலங்கை இந்து சமுத்திரத்தின் நெஞ்சில் பதித்த முத்தாக இருப்பதுதான் அந்தக் காரணமோ என்னமோ? *

---

"முதலில் கம்யூனிசமல்ல, தேசியமே என்னை லெனின் மீதும் அகிலத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளச் செய்தது. படிப்படியாக போராட்டத்தின் போக்கில் நான் மார்க்சிச — லெனினிசத்தை கற்றும், நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்தேன். உலகம் முழுவதுமுள்ள அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகளுக்கும், உலகெங்குமுள்ள தொழிலாளர்களுக்குமான விடுதலை என்பது சோசலிசத்தினாலும் கம்யூனிசத்தினாலும் மட்டுமே வென்றெடுக்கப்பட முடியும் என்ற முடிவுக்கு இறுதியாக வந்து சேர்ந்தேன். எவ்வாறு தேசபக்தியும் பாட்டாளிகளின் சர்வதேசியமும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளன என உணர்ந்தேன்"

**~ ஹோசிமின்**

www.padippakam.com

# தி.க.சி

தமிழ்நாட்டின் முக்கியமான மார்க்சிய இலக்கியத் திறனாய்வாளர்களில் ஒருவரும், சாகித்திய அக்கடமி விருது பெற்ற இலக்கியவாதியுமான 'தி.க.சி' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திருநெல்வேலி கணபதியப்பன் சிவசங்கரன் தமது 90ஆவது வயதில் சொந்த ஊரான திருநெல்வேலியில் 25.03.2014 இல் காலமானார்.

பாரதி, பாரதிதாசன், ப.ஜீவானந்தம், வ.ரா போன்றவர்களால் ஆகர்சிக்கப்பட்டும், வழி நடாத்தப்பட்டும் வந்த தி.க.சி, புதுமைப்பித்தன், தொ.மு.சி ரகுநாதன், வல்லிக்கண்ணன் போன்ற தமிழக இலக்கிய ஆளுமைகளுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்ட ஒருவருமாவார்.

ஆரம்பத்தில் வங்கி ஊழியராகத் தனது வாழ்வை ஆரம்பித்த தி.க.சி, கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக 1964இல் தமது வேலையை இராஜினாமா செய்துவிட்டு அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். அவர் கம்யூனிஸ்ட் அரசியலில் ஈடுபடத் தொடங்கிய சிறிது காலத்தில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் சித்தாந்த முரண்பாடு காரணமாக ரஸ்ய – சீன சார்பு அணிகளாகப் பிளவுண்டது. இதில் தி.க.சி இந்தியாவில் ரஸ்ய சார்பு அணியாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் (CPI) தன்னை இணைத்துக் கொண்டார்.

அதன் பின்னர் அவர் சென்னையிலிருந்த சோவியத் துணைத் தூதரகம் வெளியிட்டு வந்த 'சோவியத் நாடு' சஞ்சிகையில் 1965 முதல் சோவியத் யூனியன் தகர்ந்த 1990 வரை சுமார் 25 ஆண்டுகள் மொழிபெயர்ப்பாளராகப் பணி புரிந்தார். (அண்மையில் கனடாவில் காலமான இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க முன்னாள் செயலாளர் 'பிரேம்ஜி' என்.ஞானசுந்தரமும் கொழும்பில் சோவியத் தூதரகம் வெளியிட்டு வந்த 'சோவியத் நாடு' சஞ்சிகையில் நீண்ட காலம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது) இந்தக் காலகட்டத்தில் பல சோவியத் இலக்கியங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு தி.க.சி உதவினார். சிறிது காலம் 'தாமரை' இலக்கிய மாசிகையின் நிர்வாக ஆசிரியராகவும் பணி புரிந்தார். தி.க.சியின் சிறப்பு அம்சங்களில் ஒன்று, அவர் எப்பொழுதும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்தமையாகும். அத்துடன் பிரபலமான எழுத்தாளரோ அல்லது பிரபலமற்றவரோ, ஒருவருடைய படைப்பு வெளிவந்து அதை வாசித்தவுடன் அப்படைப்பு குறித்து குறைந்த பட்சம் ஒரு தபாலட்டையாவது அந்த எழுத்தாளருக்கு எழுதத் தவறமாட்டார். இதை அவர் தனது இறப்பு வரை செய்து வந்துள்ளார். அவரது இந்தச் செயற்பாடு பல இளம் எழுத்தாளர்களைப் பெரிதும் ஊக்குவித்து வந்துள்ளது.

60 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக முற்போக்கு இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாதது. இருந்தும் இலங்கையைச் சேர்ந்த இடதுசாரிப் புத்திஜீவிகள் பலரைப் பீடித்த தமிழ் தேசியவாதம் என்ற நோய் தி.க.சியையும் இறுதிக் காலத்தில் பீடித்துக் கொண்டது. இலங்கையில் சோவியத் சார்பு அணியில் இருந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி, பிரேம்ஜீ



தி.க.சிவசங்கரன்

ஞானசுந்தரம் போன்றோர் போலவே, தி.க.சியும் ஈழத் தமிழ் பிற்போக்குத் தேசியவாத சகதியின் ஒரு ஆதரவாளராக கடைசிக் காலத்தில் மாறி தனது ஆறு தசாப்த கால அரும்பணிக்கு ஒரு கரும்புள்ளி குத்திக் கொண்டார். அவர் சார்ந்திருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக் குழுவின் தமிழ் தேசியவாதம் நோக்கிய தடம் புரளலின் பாதிப்பு அது.

இருப்பினும் அவர் தனது வாழ்வின் பெரும் பகுதியை முற்போக்கு இயக்கத்துக்காக அர்ப்பணித்ததை எவரும் புறம்தள்ளிவிட முடியாது. தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான வண்ணதாசன் தி.க.சியின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சேந்தன்**


5ம் பக்கத்தொடர்ச்சி...

எது எப்படியிருந்த போதிலும், இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியம் என்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளால் அரை நூற்றாண்டுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அமெரிக்காவும் இதர மேற்குலக சக்திகளும் இலங்கையில் புலிகளுக்கு எதிராக நடைபெற்ற இறுதி யுத்த நிலைமைகளைச் சாக்காக வைத்து அந்த நாட்டுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் காட்டிக் கொண்டாலும், இலங்கைக்கும் அவற்றுக்குமான உறவுச் சீர்குலைவு எப்பொழுதோ ஏற்பட்ட ஒன்றாகும். அதன் அடிப்படை அன்றும் இன்றும் இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பது சம்பந்தமானது. *


படிப்பகம்

www.padippakam.com

# ரஸ்ய அதிபர் புடினின் அறிவிப்பும் தமிழ் இனவாத தேசியர்களின் நிலைப்பாடும்!



உகரேனின சட்டபூரவ அரசாஙகம மேற்கத்தைய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களால் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் கிரிமியா பிரதேச அரசாங்கம் பொதுமக்களிடையே கருத்துக் கணிப்பு நடாத்தி 90 வீதத்திற்கும் அதிகமான மக்களின் ஆதரவுடன் ரஸ்யாவுடன் இணைவதாகத் தீர்மானித்தது. அதை ரஸ்யப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டன.

உலக வரலாற்றில் அமெரிக்க – சோவியத் பனிப்போர் முடிவுற்ற பின்னரான கால் நூற்றாண்டு காலத்தில் முதல் தடவையாக ரஸ்ய – கிரிமிய இணைப்பு புதிய சர்வதேச நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. ஆனால் தனது நடவடிக்கையை நியாயப்படுத்திய ரஸ்ய அதிபர் புடின் பல காரணங்களை முன் வைத்துள்ளார். அதில் ஒன்று மிக முக்கியமானது.

அவர் சொன்ன அந்த ஒரு முக்கியமான காரணம், மேற்கத்தைய சக்திகள் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்காகப் புதிதாகக் கண்டு பிடித்த சிறுபான்மை இனங்களின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பது, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்ற புதிய தந்திரோபாயத்துக்கு ஒரு அடி கொடுப்பதற்குத்தான் என்ற போதிலும், உலகம் முழுவதும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வரும் இலங்கைத் தமிழர்கள் உட்பட பல டசின் கணக்கான சிறுபான்மை தேசிய இனங்களுக்கு ஒரு அனுகூலத்தையும் திறந்து விட்டுள்ளது.

அதாவது, கிரிமிய இணைப்புக் குறித்து கருத்து வெளியிட்ட ரஸ்ய அதிபர் புடின், கிரிமியா தனது சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துள்ளது என்ற அடிப்படையில் கருத்து வெளியிட்டிருந்தார். ( Putin said….Crimea's vote to join Russia was in line with international law and reflected its right for self-determination) உலக அரங்கில் அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் உள்ள ஒரு நாட்டின் அதிபர் வெளியிட்ட இந்தக் கருத்து இன ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு நிச்சயமாக ஒரு புதிய பலத்தை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உண்மையில் உலக வரலாற்றில் லெனின் தலைமையில் 1917 அக்டோபர் புரட்சியின் மூலம் அமைந்த சோசலிச சோவியத் யூனியனில் தான் முதன்முதலாக சிறுபான்மைத் தேசிய இனங்களின் பூரண சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப்பட்டது. 73 ஆண்டுகளின் பின்னர் அந்த நிலைமை மாறி 1990இல் சோவியத் யூனியனில் மீண்டும் முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டு, அதன் பெரும்பாலான சிறுபான்மை தேசிய இன அரசுகள் (அதில் உக்ரேனும் ஒன்று) தனி நாடாகப் பிரிந்து போய்விட்டாலும், இனப் பிரச்சினைக்கு தனி நாடாவது தீர்வல்ல என்பதை உக்ரேனிய – கிரிமிய பிரிவு மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டியுள்ளது.

**எஸ். மார்க்கண்டேயர்**

மறுபக்கத்தில் வரலாறு மீண்டும் திரும்புகிறதோ என எண்ணும் வகையில் சோசலிச சோவியத் யூனியனின் ஒரு முன்னாள் அதிகாரியான ரஸ்ய அதிபர் புடின், கிரிமிய பிரிவை நியாயப்படுத்துவதற்காக சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தை முன் வைத்திருக்கிறார். அவரது இந்த நிலைப்பாட்டை உலகின் பல நாடுகளில் இன ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் பயன்படுத்திக் கொள்ளுமா என்ற கேள்வி இந்தக் கட்டத்தில் எழுகின்றது. ஆனால் அதேநேரத்தில் சோவியத் காலகட்டத்தில் நடைபெற்று வந்த தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களுக்கும், இன்றைய போராட்டங்களுக்கும் உள்ள தன்மை வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

சோவியத் யூனியன் உதயமாகி அந்நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்ட காலத்தில், உலகம் முழுவதும் பல ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் காலனிகளை வைத்திருந்தன. எனவே அந்தக் காலனி நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களை உலக சோசலிசத்துக்கான போராட்டங்களின் அங்கமாகக் கணித்த லெனினும், ஸ்டாலினும், கார்ல்மாக்சாலும், பிரெடரிக் ஏங்கல்சாலும் உருவாக்கப்பட்ட "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்ற கோசத்தை, "உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்றுபடுங்கள்" என மாற்றினர். அதன் அடிப்படையில் சோசலிச நாடுகளான சோவியத் யூனியன், சீனா போன்றவற்றின் உதவியுடன்தான் 20ஆம் நூற்றாண்டில் அநேகமான நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றன.

இவ்வாறு புதிதாக விடுதலை அடைந்த நாடுகளில் உருவாக்கப்பட்ட காலனி வழிவந்த முாலாளித்துவ ஆட்சி முறையின் கீழ் அந்த நாடுகளின் சிறுபான்மை இனங்கள் மீது புதிய அரசுகளால் ஒடுக்குமுறை திணிக்கப்பட்டு புதிய நெருக்கடி தோன்றியது. ஆனால் காலனித்துவத்திற்கெதிரான தேச விடுதலைப் போராட்டங்களை ஆதரித்த சோசலிச நாடுகள், புதிதாக சுதந்திர நாடுகளில் உருவான தேசிய இன விடுதலைக்கான போராட்டங்களை ஆதரிக்கவில்லை.

அதற்கான காரணம், பலவீனமான இந்தப் புதிய சுதந்திர நாடுகள் மேலும் பிளவுபட்டால், அந்த நாடுகளின் மக்களின் வாழ்க்கை மேலும் பாதிப்படைவதுடன், அந்தச் சூழல் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் வாய்ப்பாகி விடும் என்பதுதான். அதற்குப் பதிலாக புதிய சுதந்திர நாடுகள் தமது மக்கள் மத்தியில் (இன ஒற்றுமை உட்பட) ஒற்றுமையைப் பேணி பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்து தன்னிறைவைப் பெற வேண்டும் என்பதுதான் புதிய சுதந்திர

www.padippakam.com

நாடுகள் குறித்த சோசலிச நாடுகளின் கொள்கையாக இருந்தது.

ஆனாலும் 1971இல் பங்களாதேஸ் ஒரு விதிவிலக்காக அமைந்தது. அமெரிக்க – சோவியத் பனிப்போர் நிலவிய அன்றைய சூழலில், பாகிஸ்தானைப் பிளவுபடுத்தி அதைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் தேவையை நிறைவேற்றுவதற்காக அதன் நட்பு நாடான சோவியத் யூனியன் பங்களாதேஸ் பிரிவினைக்கு உதவியது.

அந்தப் பிரிவினையை அடிப்படையாக வைத்தே இலங்கையில் தமிழரசுக்கட்சி முதன்முதலாக வெளிப்படையாகப் பிரிவினைக் கோசத்தை எழுப்பியது. அதுவரை காலமும் இந்தியாவின் காந்திக்கு நிகராக தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை "ஈழத்துக் காந்தி" என அழைத்து வந்த அக்கட்சியினர், அந்த அடைமொழியை மாற்றி, வன்முறை மூலம் பங்களாதேஸ் விடுதலையைப் பெற்ற முஜிபுர் ரஹ்மானின் பெயரை செல்வநாயத்துக்குச் சூடி "ஈழத்து முஜிபுர் ரஹ்மான்" என அழைக்கத் தொடங்கினர்.

அப்படித் தமது கொள்கையையும், தலைவரின் அடைமொழியையும் தமிழரசுக் கட்சியினர் மாற்றிக் கொண்டாலும், சோவியத் உதவியுடன் இந்தியாவுக்கு கூடாக இலங்கையில் தமது தனிநாட்டுக் கனவை நனவாக்க முயற்சிக்கவில்லை. பாகிஸ்தானில் செய்தது போல தமது நட்பு நாடான இலங்கையில் ஒரு பிரிவினையைச் செய்ய இந்தியாவும், சோவியத் யூனியனும் சம்மதித்திருக்கமாட்டா என்பது ஒருபுறமிருக்க, தமிழரசுக்கட்சித் தலைமையின் ஏகாதிபத்திய சார்புப் போக்கும் ஒரு காரணம்.

ஆனாலும் ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைமையின் விருப்பின்றியே அக்கட்சியின் கோப்பாய் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் சி.கதிரவேற்பிள்ளை (கதிரவேற்பிள்ளையின் மிக நெருங்கிய உறவினரும், பின்னர் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கம் ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டவருமான மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம், இலங்கை – சோவியத் நட்புறவுச் சங்க யாழ்.கிளையின் தலைவராக இறக்கும் வரை நீண்ட காலம் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது) அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து பங்களாதேஸ் பாணியில் இலங்கைத் தமிழர்களுக்கும் உதவும்படி கேட்பதற்காக இந்தியா சென்றார். அவர் புதுடில்லி செல்வதற்கு முன்னர் தமிழகத்தில் தங்கியிருந்த போது, இப்பொழுது காலமாகிவிட்ட அப்பொழுது உலகத் தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பை சந்தேகத்துக்கிடமான வெளிநாட்டுப் பின்னணியில் நடாத்தியவரும், நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கள்ளத்தோணியில் யாழ்ப்பாணம் வந்து அ.அமிர்தலிங்கத்துடன் சேர்ந்து குழப்பங்களை உருவாக்கியவருமான இரா.ஜனார்த்தனம் வீடு சென்று பானம் ஏதோ அருந்திய பின்னர் திடீரென மரணமான மர்மச் சம்பவமும் நடைபெற்றது.

இலங்கைத் தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியான ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சாதி அடிப்படையில் யாழ்ப்பாண வெள்ளாள மேட்டுக்குழாமின் அச்சொட்டான பிரதிநிதியாக இருந்ததுடன், ஏகாதிபத்திய சார்பு பிற்போக்குவாத ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் பதிப்பாகவும் இருந்தது.

ஜீ.ஜீயுடன் முரண்பட்டு தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறி தமிழரசுக்கட்சியை உருவாக்கிய செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோரும் யாழ்ப்பாண மேட்டுக்குழாமின் பிரதிநிதிகளாகவும், ஐ.தே.கவின் கள்ள நண்பர்களாகவும் இருந்ததுடன், வெளிப்படையான ஏகாதிபத்திய விசுவாசிகளாகவும்தான் செயற்பட்டனர்.

இந்த இருகட்சிகளும் ஒருபக்கத்தில் இலங்கையின் உழைக்கும் மக்களைப் பிரிக்கும் வகையில் தமிழ் இனவாதம் பேசிக்கொண்டு மறுபக்கத்தில் இனவாத சிங்கள முதலாளித்துவ மேட்டுக்குழாமுடன் (குறிப்பாக ஐ.தே.கடன்) நட்புறவுடன் செயற்பட்டனர். அதேவேளை 1956ஆம் ஆண்டுமுதல் பண்டாரநாயக்க அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்த சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியமய நடவடிக்கைகளையும் ஐ.தே.கவுடன் சேர்ந்து எதிர்த்ததுடன், நெற்காணி மசோதா, காணிச்சீர்திருத்த மசோதா போன்ற நிலப்பிரபுத்துவ விரோத நடவடிக்கைகளையும் மற்றும் தொழிலாளர் நலத் திட்டங்களையும் கடுமையாக பாராளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் எதிர்த்தே வந்துள்ளனர்.

இவர்களின் நடவடிக்கைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல அமைந்தது, 1956இல் பதவிக்கு வந்த பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, நாட்டின் இறையாண்மையைப் பலப்படுத்தும் பொருட்டு திரிகோணமலையிலிருந்த பிரித்தானியரின் கடற்படையையும், கட்டுநாயக்கவிலிருந்த விமானப்படையையும் நாட்டைவிட்டு வெளியேற்றிய போது, தமிழரசுக்கட்சித் தலைவர் அவ்வாறு வெளியேற வேண்டாம் எனக் கோரி பிரித்தானியாவின் எலிசபெத் அரசிக்கு அனுப்பிய தந்தி ஆகும். இந்தத் தேசத்துரோக நடவடிக்கையை எவ்வித வெட்கமுமின்றி தமிழரசுத் தலைவர் மேற்கொண்டார்.

பின்னர் இந்த இரண்டு கட்சிகளும் தமிழ் மக்கள் மத்தியில் அம்பலமாகத் தொடங்கியதும், தமது 25 வருடகால பகைமையை விட்டு கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதே முன்னைய ஏகாதிபத்திய சார்பு பிற்போக்குப் பாதையிலேயே பயணித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி 1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் முன்வைத்த தவறானதும், அழிவுகரமானதுமான 'தனித்தமிழீழ'த் தீர்மானத்தாலும், 1977இல் பதவிக்கு வந்த படுபிற்போக்குவாதியும், சிங்களப் பேரின வெறியனும், கடைந்தெடுத்த ஏகாதிபத்திய விசுவாசியுமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தலைமையிலான ஐ.தே.கவின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளாலும் பாதிப்புக்குள்ளான தமிழ் இளைஞர்கள் அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்தனர்.

இந்தக் கட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் யாழ்ப்பாண மாணவர் வாலிபர் காங்கிரஸ் 1920களில் வகித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்குப் பாத்திரத்திற்குப் பின்னர், மீண்டும் சில தமிழ் இளைஞர் இயக்கங்கள் அதே முற்போக்கு அடிச்சுவட்டில் உருவாகின. அந்த இயக்கங்கள் இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளுக்கு எதிரான பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் ஆயுதப் பயிற்சி எடுத்ததுடன், இந்தியாவினதும் சில சோசலிச நாடுகளினதும் ஆதரவையும் பெற்றனர்.

இப்படியான முற்போக்கு நிலைமை தமிழர் அரசியலில் ஏற்படுவதைச் சீரணிக்கமாட்டாத பிற்போக்குத் தமிழ் தலைமையும், அவர்களது சகபாடியான ஐ.தே.கவும், அவர்கள் எல்லோரினதும் ஏகாதிபத்திய எஜமானர்களும் புலிகள் என்ற பாசிச இயக்கத்தை பலப்படுத்தி முற்போக்கான தமிழ் தேசிய இன


படிப்பகம்

www.padippakam.com

விடுதலை இயக்கங்களை அழித்தொழித்தனர். புலிகளுக்கு இஸ்ரேலிய சியோனிசவாதிகளின் மொசாட் என்ற உளவுப்படை இஸ்ரேலில் வைத்து ஆயுதப்பயிற்சி வழங்கியது. இந்தப் பயிற்சி ஜே.ஆரின் சிங்களப் பேரினவாத அரசுடன் போரிடுவதற்கல்ல.

ஏனெனில் இவர்களுக்குப் பயிற்சி அளித்த இடத்துக்கு அருகிலேயே ஜே.ஆர் அரசின் இராணுவத்துக்கும் மொசாட் பயிற்சி அளித்தது. இதிலிருந்தே இந்தப் பயிற்சியின் நோக்கம் அரச படைகளை எதிர்த்துப் போராடுவதற்கல்ல, மாறாக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான முற்போக்கு தமிழ் இளைஞர் இயக்கங்களை எதிர்த்துப் போராடுவதற்குத்தான் என்பது பின்னர் புலிகளின் செயற்பாடுகள் மூலம் தெளிவானது. பின்னர் ஆர்.பிரேமதாசவின் ஐ.தே.க அரசு இந்திய அரசை எதிர்த்துப் போராடுவதற்காகவும், சக தமிழ் போராளி இயக்கங்களையும் எதிர்த்துப் போராடுவதற்காகவும் புலிகளுக்கு ஆயுதங்களும், பணமும், ஆலோசனையும் வழங்கியது.

இந்தப் பின்னணியில் உருவான புலிகள் தமிழீழம் அமைப்பதற்காகவே தாம் போரிடுவதாகச் சொல்லிக் கொண்டாலும், அந்தத் தமிழீழம் தமிழ் மக்களின் விடிவுக்கானது அல்ல. அவர்கள் இலங்கையைப் பிரித்து ஒரு தனிநாட்டை உருவாக்குவதின் மூலம், மத்திய கிழக்கில் எப்படி இஸ்ரேல் அராபியர்களுக்கு ஒரு தீராத தலைவலியாக இருக்கிறதோ, அதேபோல தென்னாசியாவின் ஒரு இஸ்ரேலாகச் செயற்படுவதே புலிகளின் நோக்கம். அதைத்தான் ஏகாதிபத்திய சக்திகளும் விரும்பின. அதனால்தான் மேற்கு நாடுகள் பெயரளவில் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகத் தமது நாடுகளில் தடை செய்தாலும், புலிகள் அந்த நாடுகளில்தான் பெருமளவு நிதி சேகரிப்புச் செய்ததுடன், ஆயுதங்களையும் அங்கிருந்துதான் வாங்கிக் குவித்திருந்தனர். இன்றும் அவர்களது முன்னணி அமைப்புகள் இந்த நாடுகளில் செல்லப் பிள்ளைகளாக நடாத்தப்படுகின்றனர்.

அதனால்தான் புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளும், இலங்கையில் இருந்து செயற்படுகின்ற புலிகளால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பும், தமிழகத்தில் ஏகாதிபத்தியதாச திராவிடப் பிழைப்புவாதிகளும் அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஏனைய மேற்கு நாடுகளும் இலங்கையில் தலையிட்டு தமிழர்களுக்கு ஒரு தீர்வைப் (தனிநாடுதான் இதன் அர்த்தம்) பெற்றுத்தர வேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

பிரித்தானியா இலங்கையைத் தனது காலனி நாடாக்கி அங்கு சுமார் 250 வருடங்கள் ஆட்சி செய்ததுடன், 1948இல் அங்கிருந்து வெளியேறுவதற்கு முன்னர் தமிழ் – சிங்கள இனங்களுக்கிடையில் திட்டமிட்டு முரண்பாட்டையும் உருவாக்கிவிட்டுச் சென்ற நாடு என்பது இந்த தமிழ் இனவாத தேசிய இயக்கங்கள் அறியாத விடயமல்ல.

அதேபோல இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின்னர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு உலகின் முதல்தரமான ஏகாதிபத்தியமாக முன்னுக்கு வந்த அமெரிக்கா, அதன் பின்னர் ஜனநாயத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் எத்தனை நாடுகளில் ஆக்கிரமிப்பு, ஆட்சிக் கவிழ்ப்பு, தலையீடு என்பவற்றை மேற்கொண்டு வந்துள்ளது என்பதும் இவர்கள் அறியாததல்ல.

இருந்தும் இந்த தமிழ் இனவாதத் தேசியர்கள் உள்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் புறக்கணித்துவிட்டு, நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும், இனங்களின் ஒற்றுமையையும் ஏற்றுக்கொள்ளாத அந்நிய சக்திகளிடம் தமது தலைவிதியை ஒப்படைப்பதற்கு முரண்டு பிடித்து நிற்கின்றனர்.

அப்படிப் பார்த்தால் இப்பொழுது கிரிமியாவின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிப் பேசுகின்ற, அதை நடைமுறையில் செய்து காட்டிய, புடினின் ரஸ்யாவின் உதவியை அல்லவா இவர்கள் நாட வேண்டும்? ஆனால் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஏனெனில் இலங்கைத் தமிழர்களின் தலைமை என்பது அன்றிலிருந்து இன்றுவரை மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் விசுவாசிகளாக இருந்து வருகின்றதேயொழிய ஒருபோதும் சோசலிச நாடுகளுடனோ அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடனோ நட்புறவு வைத்தது கிடையாது.

உள்நாட்டிலும் இது அவர்களுக்குப் பொருந்தும். இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளை எடுத்துப் பார்த்தால், தமிழ் தலைமைகள் அத்தனையும் தொடர்ச்சியாக ஏகாதிபத்திய சார்பான ஐ.தேகவுடன்தான் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டு வந்துள்ளார்கள். அவர்கள் ஒருபோதும் இடதுசாரிக் கட்சிகளுடனோ அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ இணைந்து செயல்பட்டது கிடையாது.

அவர்களுடைய இந்தப் போக்கைத் தற்செயல் நிகழ்வு என்று சொல்லிவிட முடியாது. இது வர்க்கரீதியாக யாழ்ப்பாண பிற்போக்கு மேட்டுக்குழாம் நிலைப்பாடு காரணமாக ஏற்பட்ட அரசியல் நிலைப்பாடு. எனவேதான் அதன் தொடர்ச்சியாகப் புலிகளும் செயற்பட்டார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் செயற்படுகின்றது. புலம்பெயர் புலி வாரிசுகளும் செயற்படுகிறார்கள்.

எப்படி இந்த பிற்போக்கு யாழ்.மையவாத அரசியல் சக்திகள் உருவாகுவதற்கு முன்னர் தமிழர் வாழ்வில் உருவான யாழ்ப்பாண மாணவர்–வாலிபர் காங்கிரசை ஜீ.ஜீ.பொன்னம்பல தமிழ் இனவாத அரசியலின் மூலம் ஓரம் கட்டினாரோ, அதேபோல வரலாற்றில் இரண்டாவது தடவையாக ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் உருவான முற்போக்கான தமிழ் தேசியவாத இயக்கங்களையும் புலிகள் மூலம் யாழ்.மையவாத தமிழ் பிற்போக்குத் தலைமை ஒழித்துக் கட்டியது.

இலங்கையில் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் இருக்க, தமிழ் மக்களில் பெரும்பாலோர் தொடர்ந்தும் ஏகாதிபத்திய சார்பு அணியில் இந்தப் பிற்போக்குத் தலைமைகளால் வைத்திருக்கப்படுகின்றனர். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடித்துச் செல்லப்படுவதற்கு இதுதான் அடிப்படைக் காரணம். தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து தமது பிரச்சினைகளுக்கும், நாட்டின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதை இச்சக்திகள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதையே இந்தத் தொடர் நிலைமைகள் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டி வந்துள்ளன.

இதற்காகவே அமெரிக்காவை மையமாகக் கொண்டு 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்', புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் அமைப்புகள், தமிழகத்தில் உள்ள திராவிடப் பிழைப்புவாத அமைப்புகள், இலங்கைக்கு எதிராக மேற்குலக சக்திகளால் எடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் என இந்தப் பிற்போக்கு சக்திகள் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் ஒரு பலமான அணியை உருவாக்கிச் செயற்படுகின்றனர்.

www.padippakam.com

இப்படியான ஒரு சூழலில் தமிழ் மக்களின் நலன் கருதிச் செயற்படுபவர்களுக்கு முன்னால் ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது அவர்கள் இந்த பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான அனைத்து தமிழ் முற்போக்கு – ஜனநாயக சக்திகளையும் ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையிலாவது ஓரணியில் திரட்டிச் செயற்படுவதுதான் அது. அவ்வாறு செயற்படாவிட்டால் தொடர்ந்தும் ஏகாதிபத்திய சக்திகளினதும், அவர்களுக்கு ஆதரவான உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளினதும் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவே தமிழ் மக்கள் இருப்பர். *

# அமெரிக்காவின் இராணுவச் செலவீனம்



2013இல் அமெரிக்கா தனது இராணுவத்துக்காக 633 பில்லியன் டொலர்களைச் (63,300 கோடி ரூபா) செலவு செய்துள்ளது. இது அதனது தேசிய வருமானத்தில் 5 வீதமாக இருப்பதுடன், அமெரிக்க அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் 20 வீதமாகவும் இருக்கின்றது. அத்துடன் உலக ரீதியிலான இராணுவச் செலவீனங்களில் இது 44 வீதமாகவும் இருக்கின்றது.

ஏனைய நாடுகளில் மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்காகவே தலையிடுவதாகக் கூறும் அமெரிக்கா, அதைச் செய்வதானால், முதலில் தனது அளவுக்கு அதிகமான இராணுவச் செலவீனங்களையும், சர்வதேச ஆயுத வியாபாரத்தையும் குறைக்க வேண்டும். அப்பொழுதுதான் அமெரிக்கா சொல்லும் காரணங்களை மக்கள் ஓரளவாவது ஏற்பார்கள். *

முன்பக்கத்தொடர்ச்சி...

தலையெடுக்க முயற்சிக்கின்றது என சர்வதேசத்தை ஏமாற்றவுமே அரசாங்கம் இப்படியான பொய்யான நிகழ்ச்சிகளைச் சோடித்து அரங்கேற்றுகிறது என்றும் கூறி வருகின்றனர்.

இந்த விடயத்தில் யார் சொல்வது சரி அல்லது பிழை என்று கூறுவது தேவையற்ற விடயம். ஏனெனில் இலங்கையின் ஒரு சாபக்கேடு, அரசாங்கத்துக்கு சில தேவைகள் இருப்பதால் அது சிலவற்றைக் கூறுவதும், அரசாங்கம் சொல்வது அத்தனையும் பொய் என்று அதன் எதிராளிகள் சொல்வதும் மாற்ற முடியாத ஒரு மரபாகி விட்டது.

இருந்தாலும் தமிழ் தரப்புகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செய்து வருகின்ற பிரச்சாரங்களை வைத்துப் பார்த்தால், புலிகள் இயக்கத்தைப் புதுப்பிக்கும் எண்ணத்தை மிச்சசொச்சமாக இருக்கும் அதன் ஆதரவாளர்கள் கைவிட்டு விடவில்லை என்பதை விளங்கிக் கொள்ள முடியும். அதையொட்டி போர் முடிவுற்ற பின்னர் நாட்டுக்குள் சில சம்பவங்களும் நடைபெற்று வந்துள்ளன. எனவே அரசாங்கம் இந்த விடயம் குறித்து மெத்தனமாகவோ அல்லது அலட்டிக் கொள்ளாமலோ இருக்கும் என யாராவது எதர்பார்த்தால், அது அவர்களது முட்டாள்தனம்.

புலி இயக்கத்தைப் புதுப்பிக்க விரும்புபவர்களுக்கும், அவ்வாறு புதுப்பிக்கப்பட்டால், அதைப் பொதுமக்கள் ஆதரிக்கும் நிலைமை ஏற்படுவதற்கும் இரண்டு வெவ்வேறு வகையான காரணங்கள் இருக்கின்றன.

புலிகள் இயக்கத்தைப் புதுப்பிக்க விரும்புவர்களின் நோக்கம் முற்றுமுழுதாக சுயலாபம் சம்பந்தமானதுடன் அழிவுகரமானதுமாகும். முதலாவதாக தமது இயக்கத்தையும் தமது தலைமையையும் அழித்த இலங்கை அரசாங்கத்தை எப்படியும் பழிவாங்கிவிட வேண்டும் என்ற வெறியில் அவர்கள் இருக்கிறார்கள்.

இப்படியானவர்கள் புலிகள் அழிக்கப்படாமல் இருந்து அவர்கள் தலைமையில் இலங்கையில் ஒரு தனிநாடு அமைந்தாலும் அங்கு ஒருபோதும் வாழ எண்ணாதவர்கள். அப்படியிருந்தும் ஏன் இவர்கள் ஒரு தனிநாட்டுக்காக ஆவேசத்துடன் காவடியாடுகிறார்கள் என்ற கேள்வி சிலருக்கு எழலாம்.

காரணம் என்னவெனில் புலிகள் இலங்கையில் பலத்துடன இருந்து அரசாங்கத்துடன் போரில் ஈடுபட்ட காலத்தில் இந்த புலி சார்பு சக்திகள் பெரும் இலாபங்களைப் பெற்று வந்திருக்கின்றனர். அதாவது புலம்பெயர் நாடுகளில் இந்த சக்திகள் தமிழ் சமூகத்திடம் கோடிக்கணக்கான டொலர்களையும், யூரோக்களையும், பவுண்ஸ்சையும் வசூல் செய்து, பல விதமான வியாபாரங்களில் முதலீடு (போதை வஸ்து, ஆயுத வியாபாரம, ஆட்கடத்தல் உட்பட) செய்து மிகவும் வாய்ப்பு வசதிகளுடன் வாழ்ந்து வந்திருக்கின்றனர். புலிகள் அழிந்ததால் இன்று அந்த வசதிகளை இழந்து தவிக்கின்றனர். எனவே மீண்டும் புலிகளைப் புதுப்பித்து அந்தச் சுகபோகங்களை அனுபவிக்க ஆவல்படுகின்றனர்.

மறுபக்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள புலி ஆதரவுச் சக்திகள் இந்த புலம்பெயர் புலிகளின் ஆதரவிலேயே தமது அரசியல் பிழைப்பையும், தமது வாழ்க்கை வசதிகளையும் அனுபவித்து வந்திருக்கின்றனர். அவர்களும் நீரூற்று வற்றியதால் துவண்டு போயிருக்கின்றனர். எனவே மீண்டும் இலங்கையில் ஒரு யுத்த சூழலை உருவாக்கி அதில் குளிர்காய முயல்கின்றனர்.

இதுதவிர சில வெளிநாட்டு சக்திகள் இலங்கை சம்பந்தமான தமது பூகோள அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்காக புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு உதவுகின்றனவோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இந்த நாடுகளில் பல புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகத் தமது நாடுகளில் தடை செய்துள்ள போதிலும், புலிகளுக்குச் சார்பான அவர்களது முன்னணி


படிப்பகம்

www.padippakam.com

அமைப்புகள் தமது நாடுகளில் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்துள்ளனர். இந்த அமைப்புகளில் சில தமது நடவடிக்கைகளின் போது தடை செய்யப்பட்ட புலிகளின் கொடிகளை பகிரங்கமாக ஏந்திச் செல்கின்றனர்.

உதாரணமாக புலிகளை ஆதரிக்கும் சக்திகளைப் பெருமளவில் கொண்ட வி.உருத்திரகுமாரன் தலைமையிலான 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' என்ற பிரிவினைவாத அமைப்பு தன் மண்ணில் இருந்து செயற்படுவதற்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. பழமை வாய்ந்த ஜனநாயக பாரம்பரியத்தையும், இறைமையையும் கொண்ட ஒரு நாடான இலங்கையைப் பிரிக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படும் ஒரு அமைப்பு தன் மண்ணில் செயற்பட அனுமதித்திருப்பது நியாயமானதா என அமெரிக்கா சிந்தித்தாகத் தெரியவில்லை.

இதுமாதிரியான அமைப்பொன்று அமெரிக்காவைப் பிரிக்க வேண்டும் எனக் கோரி, சீனாவிலோ அல்லது இந்தியாவிலோ இருந்து செயற்பட்டால் அமெரிக்கா அனுமதிக்குமா? அல்லது சீனாவினதும் இந்தியாவினதும் பிரிவினைவாத அமைப்புகளில் ஒன்று அமெரிக்க மண்ணில் இருந்து செயற்பட அமெரிக்கா அனுமதிக்குமா? ஆனால் இலங்கைக்கு எதிராக மட்டும் அமெரிக்காவில் இருந்து பிரிவினைவாத அமைப்பொன்று செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகின் பலம் வாய்ந்த நாடுகளுக்கு ஒரு நீதி, இலங்கை போன்ற சுண்டைக்காய் நாடுகளுக்கு ஒரு நீதி என்ற நடைமுறை பின்பற்றப்படவில்லையா?

புலம்பெயர் நாடுகளிலுள்ள புலிச் சக்திகளும் சரி, தமிழகத்திலுள்ள புலி ஆதரவுச் சக்திகளும் சரி, சர்வதேச புலி ஆதரவுச் சக்திகளும் சரி, இலங்கையில் புலிகள் இயக்கத்தை மீள் உருவாக்கம் செய்வதால் ஏற்படப் போகும் அழிவுகளையும், பயங்கர விளைவுகளையும் எண்ணிப் பார்ப்பது அவசியம். ஏற்கெனவே 30 வருடங்களாக இலங்கை மக்கள், அதிலும் தமிழ் மக்கள் அடைந்த அழிவுகள் எண்ணிப் பார்க்க முடியாதவை. அந்த நாசகார யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில், யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பும் மட்டுமின்றி, அப்பாவிப் பொதுமக்களும் மிகப்பெரிய விலையைக் கொடுத்துள்ளனர். தயவு செய்து மீண்டும் அந்த நிலையை உருவாக்காதீர்கள்.

அதேநேரத்தில் புலிகள் இயக்கம் திரும்பவும் இலங்கைத் தமிழ் மக்களின் இதயங்களில் வேரூன்றுவதற்கான நிலைமைகள் தொடர்கின்றன என்பதை அரசாங்கமும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தை அலங்கரிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் கவனத்தில் எடுப்பதும் அவசியம்.

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்களாகியும் தமிழ் பேசும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் எதிர்பார்த்த அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அரசாங்கம் இன்னமும் நிறைவேற்றாமல் இழுத்தடிப்பது அந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. அதன் பிரதிபலிப்பே அரசாங்கம் பல பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்த போதிலும் நடந்து முடிந்த வட மாகாணசபைத் தேர்தலில் அதற்குக் கிடைத்த தோல்வியாகும்.

அதேபோல கடந்த 60 வருடங்களாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஆக்கபூர்வமாக ஈடுபடும் மனமின்றி, பிச்சைகாரனின் புண்ணாக அதை வைத்து அரசியல் இலாபம் தேடி வந்த பழைய தமிழ் தலைமைகளின் பாதையிலேயே தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பயணிக்கிறது. அது எவ்வளவுதான் தந்திரங்கள் செய்து தாம் ஒரு தவறும் செய்யாதவர்கள் போலவும், அரசாங்கமே எல்லாத் தவறுகளுக்கும் காரணம் என்றும் தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சித்தாலும், தமிழ் மக்கள் வெகுவிரைவில் அவர்களது சுயரூபத்தைக் கண்டறிந்து அவர்களை ஓரம்கட்டி வைப்பார்கள் என்பதையும் அவர்கள் உணர வேண்டும். 25 வருடங்களாகத் தம்மை ஏமாற்றி வந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைமைகளுக்கு 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் இவ்வாறுதான் தமிழ் மக்கள் பாடம் படிப்பித்தார்கள் என்பதை அவர்கள் நினைவில் வைத்திருப்பது அவசியம்.

எனவே அரசாங்கம் சொல்லும் 'புலிக்கதை' பற்றி யாரும் மெத்தனமாக எடுக்கக்கூடாது. ஏனெனில் அரசாங்கம் சொன்ன சம்பவங்கள் குறித்த சில சந்தேகங்கள் இருந்தாலும், புலிகள் இயக்கத்தைப் புதுப்பிப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முயற்சிகள் நடந்து வருகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

**இதில் எமது கோரிக்கைகள் இரண்டு:**

முதலாவது கோரிக்கை புலி ஆதரவாளர்களுக்கானது. அதாவது தயவுசெய்து மீண்டும் புலிகளின் பயங்கரவாத இயக்கத்தைப் புதுப்பித்து நாட்டை இரத்தக்களரி ஆக்காதீர்கள். நீங்கள் இலங்கையை சட்டியில் போட்டு அதன் கீழ்நெருப்பு மூட்டி அதைக் காய்ச்சி எடுக்கப்போவதாக எண்ணாதீர்கள். அவ்வாறு நீங்கள் காய்ச்சும் சட்டிக்குள் இலங்கைத் தமிழர்களும் கூடவே வெந்து மடிவார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

இரண்டாவது கோரிக்கை அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும். தயவு செய்து இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நியாயமான அபிலாசையான அதிகாரப் பகிர்வை உடனடியாக நிறைவேற்ற இணைந்து செயற்படுங்கள். அதேநேரத்தில் புலிப் பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்காமலும் பார்த்துக் கொள்ளுங்கள்.

இவைதான் நமது பொன்னான தாய்நாட்டை நேசிக்கின்ற தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள், பறங்கியர்கள் அனைவரினதும் இதயபூர்வமான அபிலாசைகளாகும்.
*


படிப்பகம்

www.padippakam.com



# வெள்ளைத் துரையும் கறுப்புத் துரையும்!

"மொழிவாரிப் பிரிவினை 1956இல் பூர்த்தியான போது நீலகிரி தமிழகத்தின் ஒரு பகுதியானது. அதனால் 1964ல் சிரிமாவோ பண்டாரநாயக்கா — லால்பகதூர் சாஸ்திரி ஒப்பந்தப்படி தாயகம் திரும்பிய இலங்கை மலையகத் தமிழர்கள் லட்சக்கணக்கில் அங்கு குடியமர்த்தப்பட்டனர். ஆதிவாசிகளான படுகர், தோடர் வசித்து வந்த கிராமங்களுக்கு இடையே அவர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டது.

மலையகத் தமிழர் வாழ்க்கை முறைகளுக்கும் ஆதிவாசிகளின் கலாச்சாரத்துக்கும் ஒத்துப் போகவில்லை. மெல்ல...மெல்ல நீலகிரியின் பழங்குடிகள் பிரித்தாளப்பட்டனர். தங்கள் பூர்வீக மலைகளிலேயே அவர்கள் புலம்பெயர்ந்தவர்கள் ஆனார்கள்"

– இவ்வாறு கூறியிருக்கிறார் டாக்டர் ஸ்யாம் என்பவர் தாம் 'கல்கி' வார இதழில் எழுதிய 'தமிழகப் பழங்குடிகளின் கதை' என்ற கட்டுரைத் தொடரில்.

இதைப் படிக்கும் போது ஒரு விடயம் தெரிய வருகிறதல்லவா? அதாவது இலங்கையைக் கைப்பற்றிய பிரிட்டிசார் இதேபோலத்தான் அங்கு தாம் உருவாக்கிய தமது தேயிலை, ரப்பர், கொக்கோ தோட்டங்களில் கொத்தடிமைகளாக வேலை செய்வதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வந்த தமிழர்களை இலங்கையின் மலையகப் பகுதிகளில் இருந்த சிங்கள மக்களின் பூர்வீகக் கிராமங்களுக்கு மத்தியில் குடியிருத்தினர். திட்டமிட்டுச் செய்த இந்த நடவடிக்கையால் கிராமப்புற சிங்கள மக்களுக்கும் மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையே நிரந்தரமான முரண்பாட்டை உருவாக்கினர்.

ஏகாதிபத்திய வெள்ளையர்கள் தமது சுரண்டல் நலன்களுக்காக அப்படிச் செய்தார்கள் என்றால், சுதந்திரம் பெற்ற இந்திய நாட்டின் அதிகார வர்க்கமும் அதையேதான் செய்துள்ளதை நீலகிரி நிலைமை படம் பிடித்துக் காட்டுகிறது. அங்கே இந்திய அதிகாரிகள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய மலையகத் தோட்டத் தொழிலாளர்களை நீலகிரியின் பழங்குடி மக்களிடையே குடியமர்த்தி அவர்களுக்குள் முரண்பாட்டை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளுக்கும் கறுப்பு இந்திய அதிகாரிகளுக்கும் தோல்களில்தான் வித்தியாசமே தவிர, செயற்பாடுகளில் எந்த வித்தியாசமும் இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. வர்க்கத்தின் நிறம் ஒன்றுதானே? *

# வீடுகளில் துளசி வளர்ப்பது ஏன் அவசியம்?

நாம் சுவாசிக்கும் காற்றில் புற்றுநோயை உருவாக்கும் நச்சுத்தன்மைகள் அதிகம் இருப்பதாக 'லான்செட்'' என்ற பிரபல மருத்துவ இதழ் தெரிவிக்கின்றது. 'மிக வேகமாகத் தொழில்மயமாகி வரும் நாடுகளில் மாசடைந்த காற்றைச் சுவாசிப்பதால் புற்றுநோய் இறப்புகள் அதிகரித்து வருகின்றன. எனவே காற்று மண்டலத்தில் அதிகரித்து வரும் மாசைக் கட்டாயமாக குறைத்தே ஆக வேண்டும்' என்று எச்சரிக்கிறது அந்த அறிக்கை.

விஞ்ஞானி ஜேம்ஸ்வாட் 1769இல் நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்தார். அப்போதைய ஆய்வுகளின்படி காற்று மண்டலத்தில் மாசுக்குரிய கரியமிலவாயு எனப்படும் CO வின் அளவு 278 பி.பி.எம் (Parts per million) தான் இருந்துள்ளது. 350 பி.பி.எம்.க்குள் இருக்க வேண்டிய ஒக்சிஸன் மாசுபடும் அளவு 400 பி.பி.எம்.ஆக உயர்ந்துள்ளது.

பூமியின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவிகிதம் வனப்பகுதியாக இருக்க வேண்டும். இந்திய அளவில் 24 சதவிகிதமும், தமிழக அளவில் 17 சதவிகிதமும்தான் தற்போது வனப்பகுதிகளாக இருக்கின்றன.

இதற்கு ஒரே தீர்வு மரங்கள் வளர்ப்பது, காடுகளைப் பெருக்குவது, பசுமை அளவை உயர்த்துவதுதான் எனக் கூறப்படுகிறது. அதில் அரச மரம், மூங்கில், துளசி ஆகிய மூன்றும் மட்டுமே மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அரச மரம் வளர்ந்து பலனைக் கொடுக்க 10 ஆண்டுகள் ஆகும். மூங்கில் வளர்ந்து பயன்தர 3 ஆண்டுகள் ஆகும். ஆனால் துளசி அப்படியல்ல. அது உடனடியாக வளரும். வளரும் போதே நம்மைக் காக்கும்.

துளசி மட்டும்தான் 24 மணி நேரமும் இயற்கைப் புத்துணர்ச்சியை வழங்குவது. அதிகாலை வேளையில் 4 மணி நேரம் $O_3$ எனப்படும் ஓசோனையும், மீதம் 20 மணி நேரம் $O_2$ எனப்படும் ஒக்சிசனையும் வெளிப்படுத்தக்கூடியது துளசி. வீடுகளிலும், கோயில்களிலும் இதனால்தான் துளசிச் செடியை வளர்க்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் சொன்னார்களோ என்னவோ?

வீட்டிலேயே துளசிமாடத்தைச் சுற்றி வந்து தம் அன்றாடப் பணிகளைத் தொடங்கிய அன்றைய காலத்துப் பெண்கள் பெண்கள் உற்சாகத்தோடும் கருணையோடும் வலுவோடும் இருந்திருக்கிறார்கள்.



துளசியின் மருத்துவ குணங்கள் ஒருபுறம் இருந்தாலும், அதற்குக் காற்றில் இருக்கும் மாசை நீக்கும் அரிய குணம் இருப்பது நாம் செய்த பெரும் பாக்கியம். அதனால்தான் துளசிச் செடி வளர்க்கும் ஆர்வத்தைப் பொதுமக்கள் மத்தியில் பரவலாக்கி வருகின்றோம்.

சமீபத்தில் நடந்த திருமணம் ஒன்றில், தாம்பூலமாக ஆயிரம் தென்னங்கன்றுகளும், ஆயிரம் துளசிச்செடிப் பாக்கெட்டுகளும் வந்திருந்தவர்களுக்குப் பரிசாகத் தந்தோம். ஒவ்வொரு வீட்டிலும் 16 துளசிச் செடிகள் வளர்க்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை.

– இவ்வாறு கூறியிருக்கிறார் திருச்சியைச் சேர்ந்த உலக பசுமை வளர்ச்சிக் குழுவின் தலைவரான கே.பாலசுப்பிரமணியன் 'கல்கி' வார இதழுக்குக் கொடுத்த பேட்டி ஒன்றில். (பேட்டியின் முக்கிய பகுதிகளே இங்கு இடம் பெற்றுள்ளன) *


படிப்பகம்